## காலி மரபுரிமை மன்றம் - 2015

காலி மரபுரிமை மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 7 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்ற அதிகாரச்சட்டத்தின் 13(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் காலி மரபுரிமை மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து காலி மரபுரிமை மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

மன்றத்திற்கு கிடைக்கின்ற அரச மானியங்களை கணக்கு வைத்தல் தொடர்பான கணக்கீட்டுக் கொள்ளை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன், வருடாந்தம் கிடைக்கின்ற மானியங்கள் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த மானியங்களை பயன்படுத்தி கைப்பற்றப்பட்டிருந்த நடைமுறையல்லா சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்விடுதல் மூலம் அவற்றின் பெறுமதி குறைவடைந்திருந்ததெனினும், அந்தப் பெறுமானத்தால் மானியங்களை காலக்கழிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

காலி கோட்டையில் அமைந்துள்ள மணிக்கூட்டு கோபுரம் மற்றும் மணிக்கோபுரத்தின் பாதுகாப்புக் கிரயமான ரூபா 15,048,677 தொகை கணக்குகளில் சொத்துக்களாக உள்ளடக்கப்பட்டுள்ளதெனினும், அந்த கோபுரங்களின் உரித்து தொடர்பான எழுத்து மூல சான்றுகள் முன்வைக்கப்படவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மன்றத்தின் நிதி விளைவுகள் ரூபா 2,090,324 மிகையாக இருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,760,366 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 329,958 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக ஊழியர் வேதனங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு சீராக்கலின் பின்னர் மன்றத்தின் பங்களிப்பிலும் தொடர்ச்சியான அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அமைச்சிடமிருந்து கிடைக்கின்ற மானியங்கள் ரூபா 1,000,000 இனால் அதிகரித்திருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3.2 மன்றத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்**

2011 ஆம் ஆண்டின் போது தற்காலிகமாக ஆட்சேர்க்கப்பட்ட பெண் ஊழியர் ஒருவரை சேவையிலிருந்து அகற்றியதன் பின்னர் அவரை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு கோரி மன்றத்திற்கு எதிராக தொழில் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்ததெனினும், இது தொடர்பில் கணக்குகளில்

வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த வழக்கிற்காக 2015 திசெம்பர் வரையில் வழக்கறிஞர் கட்டணமாக மன்றத்தால் ரூபா 84,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வழக்கின் தீர்ப்பு வெளியிடப்பட்டிருக்கவில்லை.

**3.3 விளைவுற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

காலிக் கோட்டையிலுள்ள மூன் பஸ்டியன் கலை காட்சிக்கூடம் 2014 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டினுள் சுற்றுலாப்பயணிகளுக்காக திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததெனினும், 2016 மார்ச் மாதமளவிலும் அது திறக்கப்பட்டிராமையால் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக வருமானமீட்டுவதற்கான நடவடிக்கை எடுக்காமல் மூடப்பட்டிருந்தது.

**3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் பின்னர் பொருள் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

1994 இன் 7 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்ற அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மன்றத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

- வரலாற்று பின்னணியுடைய நகர மத்திய நிலையமொன்றாகவும் தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமொன்றாகவும் காலிக் கோட்டை மற்றும் அதன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பகுதியை மேம்படுத்தல், பேணுதல், பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

- காலிக்கோட்டை மற்றும் அதன் வரலாற்று பின்னணியுடைய நிலப்பரப்பினுள் அமைந்துள்ளதும் வரலாற்று பின்னணி, கலாசார மற்றும் அழகியல் பெறுமதி கொண்டதுமான சில அசையாத மற்றும் அசையும் சொத்துக்களை கைப்பற்றல், ஏற்றல், பேணிச்செல்லல் மற்றும் அகற்றுதல்.

- காலிக்கோட்டை மற்றும் அதன் வரலாற்றுப் பின்புலத்தில் அமைந்துள்ள வீடுகள், கட்டிடங்கள் மற்றும் ஏனைய ஆதனங்களை பாதுகாப்பதன் மூலம் காலிக் கோட்டையினுள் குடியிருப்போரின் அக்கறையினை மேம்படுத்தல்.

- காலிக்கோட்டை மற்றும் அதன் வரலாற்றுப் பின்புலமுடைய நிலப்பரப்பினுள் உட்பிரவேசித்து பார்வையிடுவதற்கு உரிய வசதிகளை ஏற்படுத்தல்.

- காலிக்கோட்டை மற்றும் அதன் வரலாற்றுப் பின்புலமுடைய நிலப்பரப்பினுள் குடியிருப்போரின் சாதாரண நலன்களை மேம்படுத்தல்.

- மேற்கூறிய அனைத்து நோக்கங்களையும் அல்லது அதில் சிலவற்றையாவது நிறைவேற்றுவதற்குத் தேவையான ஏனைய சகல செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் இடம்பெற்ற பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் அங்கவீனமுற்றோருக்கான மலசலகூடமொன்றினை நிர்மாணித்தல் ஆண்டினுள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காலிக் கோட்டையினுள் அமைந்துள்ள பழைய கச்சேரிக் கட்டிடத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக காலி மரபுரிமை மன்றத்தின் அலுவலகம் 2012 திசெம்பர் மாதம் முதல் மாதமொன்றிற்கு 30,000 படியான வாடகை செலுத்தி காலிக்கோட்டையிலிருந்து புறம்பாக சுமார் 2 கிலோ மீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ள தனியார் கட்டிடமொன்றிற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. காலிக் கோட்டையினுள்ள அத்துமீறிய நிர்மாணங்களை அவதானித்தல், குடியிருப்பாளர்களின் பழைய வீடுகள் மற்றும் அரச மற்றும் தனியார் கட்டிடங்களின் பாதுகாப்புப் பிரச்சினைகளை தீர்த்தல், சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் மற்றும் தகவல் தொடர்பாடல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றும் போது மன்றத்திற்கு அது இடையூறாகக் காணப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்திற்கு அதிகளவு அதிகாரங்களை உரித்தாக்குதல் மற்றும் மன்றத்திற்கு வருமானம் ஈட்டும் முறையொன்றினை அமுல்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக 1994 இன் 7 ஆம் இலக்க காலி மரபுரிமைகள் மன்ற அதிகாரச்சட்டத்தினை திருத்தும் தேவைப்பாட்டினை இனங்கண்டு அதற்காக 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவை பிரமாணக்குறிப்பொன்று தயாரிக்கப்பட்டிருந்ததெனினும், 2016 மார்ச் மாதம் வரையிலும் அந்த அதிகாரச்சட்டத்தின் திருத்த நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) 2010 சனவரி மாதம் முதல் 2016 மார்ச் மாதம் வரையான காலப்பகுதியினுள் காலிக்கோட்டையினுள் 70 அத்துமீறிய நிர்மாணங்கள் மற்றும் தொல்பொருளியல் சின்னங்களுக்கான சேதங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 50,000 முதல் ரூபா 500,000 வரையான தண்டப்பணங்கள் விதிக்கப்பட்ட 50 சந்தர்ப்பங்களளவில் அவதானிக்கப்பட்டதுடன், அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு மன்றத்திற்கு சட்டரீதியான நிதியேற்பாடு இல்லாமை மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை அதற்காக துரிதமாக ஈடுபடுத்தக்கூடிய இயலுமை குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் மன்றம் தாபிக்கப்பட்ட அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அது இடையூறாகக் காணப்பட்டது..

(இ) 2015 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் கலாசார அலுவல்கள் அமைச்சினால் யுனெஸ்கோ அமைப்பிற்கு உலக மரபுரிமையான காலிக் கோட்டையினை பாதுகாத்தல் தொடர்பில் முன்வைக்கப்பட்ட முகாமைத்துவ திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் தொடர்பிலான பாதுகாப்புத் திட்டம் மற்றும் செயற்திட்ட அறிக்கைகள் தயாரிப்பதற்குரிய மன்றத்தின் செயற்பணி, பொறுப்பு மற்றும் மன்றத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் தொடர்பில் மன்றத்தினால் தெளிவான நோக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 17 ஆம் நூற்றாண்டின் முதற் காலப்பகுதிக்குரிய காலிக் கோட்டையில் அமைந்துள்ள அஞ்சல் அலுவலக கட்டிடத்தின் 1500 சதுர அடிகள் அளவான பாதுகாக்கப்படாத பகுதியின் கூரை 05 வருட காலமாக முழுமையாக துருப்பிடித்திருந்தது. இந்தக் கட்டிடத்தினை பாதுகாப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் போதிளயவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) போசனசாலையொன்றினை வாடகைக்கு வழங்குவதற்கான கொள்வனவு தீர்மானம் 2015 யூன் 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்ததெனினும், குத்தகை உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதற்கு 02 மாதங்கள் தாமதமடைந்தமையால் அந்தக் காலப்பகுதியினுள் பெறவேண்டிய ரூபா 100,000 தொகையான குத்தகை வாடகை மன்றத்திற்கு இழப்பாகியிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த குத்தகை வாடகையினை செலுத்தாமையால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 209,200 தொகையான வாடகைத் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் முதல் 8 மாத காலப்பகுதியில் ரூபா 3,500,000 இனை விஞ்சிய மீதியொன்றும், எஞ்சிய 4 மாத காலப்பகுதியில் ரூபா 7,500,000 இனை விஞ்சிய மீதியொன்றும் சேமிப்புக் கணக்கொன்றில் தொடர்ச்சியாக பேணிச் செல்லப்பட்டிருந்தது. இந்த பணம் அந்த வங்கியிலேயே நிலையான வைப்பாக முதலிடு செய்யப்படுமேயானால் ரூபா 72,000 அளவிலான மேலதிக வட்டி வருமானமொன்றினை ஈட்டக்கூடிய இயலுமை தொடர்பில் மன்றத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

காலி மரபுரிமை மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 19 ஆக இருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்வாறு வெற்றிடங்களின் எண்ணிக்கை 06 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய மன்றத்தின் பணிப்பாளர் பதவிக்காக 2007 ஏப்ரல் 11 ஆந் திகதி முதல் ஒய்வுபெற்ற பிரதேச செயலாளரொருவரும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு 2006 சனவரி 03 ஆந் திகதியிலிருந்து ஓய்வுபெற்ற பெண் உத்தியோகத்தரொருவரும் வருடாந்தம் காலம் நீடிப்பு செய்து நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த நியமனம் மற்றும் மன்றத்தில் நிலவும் வெற்றிடங்களின் காரணத்தால் பாதுகாப்புச் செயற்திட்டங்கள் மற்றும் புதிய வருமானமீட்டும் செயற்திட்டங்களின் அமுலாக்கல் தாமதமடைதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ திட்டத்திற்கு ஒத்திசைவது தாமதமடைதல் உள்ளடங்கலாக மன்றத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 இன் படி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்படுத்தப்பட்டிருக்காததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலமும் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

**(அ) வருமானம் சேகரித்தல்**

அனுமதிப்பத்திரங்களுக்கான கட்டணங்களை அறவிடல், இராணுவ அறைகளின் வாடகையினை அறவிடல் மற்றும் சிற்றுண்டிச்சாலை வாடகை அறவிடல் போன்ற வருமான சேகரிப்புக்களை நாளதுவரையாக்குதல்.

**(ஆ) கணக்கீடு**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் வருடாந்த பெறுமானத்தேய்வினை கணக்கீடு செய்தல் மற்றும் சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு அறிக்கையிடலை நாளதுவரையாக்கல்.

**(இ) கொள்வனவு நடைமுறை**

இராணுவ அறைகளை வாடகைக்கு வழங்குதல், சிற்றுண்டிச்சாலையினை குத்தகைக்கு வழங்குதல் போன்ற கொள்வனவு நடவடிக்கைகளை முறைமைப்படுத்துதல்.

**(ஈ) மறுசீரமைப்பு நடைமுறை**

யுனெஸ்கோ ஒழுங்கமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ திட்டத்திற்கு இசைவாக மன்றத்தின் மறுசீரமைப்பு பணிகளை துரிதப்படுத்துதல்.